
වාර්ෂික වාර්තාව සහ ගිණුම් ප්‍රකාශය
வருடாந்த அறிக்கையும் நிதிக்கூற்றும்
ANNUAL REPORT & STATEMENT OF ACCOUNTS
පුනරුත්ථාපන අධිකාරිය
புனர்வாழ்வு அதிகாரசபை
REHABILITATION AUTHORITY
2012

# பொருளடக்கம்

1. கையளிப்புக் கடிதம்

2. வருடாந்த அறிக்கை

3. வருடாந்த கணக்குகளின் அறிக்கை

4. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

5. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் மீதான தலைவரின் அவதானிப்பு

## <u>கையளிப்புக் கடிதம்</u>

***கௌரவ. சந்திரசிறி கஜதீர,***

*பாராளுமன்ற உறுப்பினர்,*

*புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்.*

***புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு,***

***இல.** 35, ஏ, டாக்டர் என். எம். பெரேரா மாவத்தை, கொழும்பு – 08.*

***கௌரவ அமைச்சர் அவர்களுக்கு,***

*1971ஆம் ஆண்டின் 38ம் இலக்க நிதிச்சட்டம் மற்றும் 1987ஆம் ஆண்டின் 29ம் இலக்க ஆட்களையும், ஆதனங்களையும், கைத்தொழில்களையும் புனரமைப்புச்செய்யும் அதிகாரசபையின் 2012ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த நிதியாண்டிற்கான நிதியறிக்கையையும், அதிகாரசபையின் ஆண்டறிக்கையையும் கணக்குகளின் கூற்றையும் பணிப்பாளர் சபையின் சார்பில் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.*

*உங்கள் உண்மையுள்ள,*

**ஈ.ஏ. சமரசிங்க,**

*தலைவர்,*

*புனர்வாழ்வு அதிகாரசபை.*

***ஆட்களையும் ஆதனங்களையும் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை. (றெப்பியா),***

*இல. 59, டீ. எஸ். சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு- 08.*

# தூர நோக்கு

புனர்வாழ்வளித்தல் ஊடாக சமூக பொருளாதார மற்றும் சமூக இணக்கப்பாட்டை ஏற்படுத்தல்.

**குறிக்கோள்**

வன் செயல்கள், குழப்பங்கள், இனக்கலவரங்கள், யுத்தம் மற்றும் கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்களினது மறுவாழ்வை புனர்வாழ்வினூடாக ஏற்படுத்தி பொருளாதார விருத்தி கண்ட தேசமாக, சமூகமாக ஆவதற்குரிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

# ஆட்களையும், ஆதனங்களையும், கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபையின் (றெப்பியா)

## 2012ம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை.

1987ம் ஆண்டின் 29ம் இலக்க புனர்வாழ்வு அதிகார சபைச் சட்டத்தின் மூலம் இச்சபை உருவாக்கப்பட்டது.

**2012ம் ஆண்டுக்கான புனர்வாழ்வு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை விபரம் வருமாறு:**

| | | | |
|---|---|---|---|
| 1. | **திரு. ஈ.ஏ. சமரசிங்க** | - | தலைவர் |
| 2. | **திரு. டீ.கே. ஜினதாச** | - | நிறைவேற்றுப் பணிப்பாளர் |
| 3. | **திரு. டி. சிறிதரன்** | - | பணிப்பாளர் |
| 4. | **ஜனாப். ஏ. சமூன் கலீல்** | - | பணிப்பாளர் |
| 5. | **திரு. பி. கிறிவத்துடுவ** | - | பணிப்பாளர் |

பயங்கரவாத நடவடிக்கைகள் இன வன்செயல்கள், அரசியல் வன்முறைகள் என்பவற்றால் பாதிப்புற்ற ஆட்களையும், ஆதனங்களையும், கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் நோக்கில் பின்வரும் கடமைகளையும் பொறுப்புக்களையும் இச்சபை கொண்டுள்ளது.

### (அ) அரச அதிகார பணிகள் (Statutory Functions)

1) பயங்கரவாத செயற்பாடுகளினால் பாதிப்புற்றவர்களுக்கு நிவாரணம் அளித்தல்.
2) பயங்கரவாதத்தினால் பாதிப்புற்ற வீடுகள் சொத்துக்களின் உரிமையாளர்களுக்கு உதவியளித்தல்
3) பயங்கரவாதத்தினால் பாதிப்புற்ற வீடுகள் சொத்துக்களின் குடியிருப்பாளர்களுக்கு உதவியளித்தல்
4) பாதிப்புற்ற சொத்துக்களை இடித்து அழிப்பதற்கும் அதனால் ஏற்படும் சிதைவுகளை அப்புறப்படுத்துவதற்கும் கட்டளையிடல்.
5) பாதிப்புற்ற தொழில்கள், வியாபார முயற்சிகள் என்பனவற்றை கட்டியெழுப்ப உதவுதல்.
6) பாதிப்புற்ற சொத்துக்களை அரசுடமையாக்குதல்.
7) அங்கனம் அரசுடமையாக்கப்பட்ட சொத்துக்களின் உண்மையான உரிமையாளர்களுக்கு அச்சொத்துக்களை மீளக் கையளித்தல்.
8) அரசின் பொறுப்பில் பாரஞ்சாட்டப்பட்ட சொத்துக்களின் உரிமையாளர்கள் அவற்றின் குடியிருப்பாளர்கள் இடையில் உண்டாகும் இது சம்பந்தமான பிணக்குகளைத் தீர்த்து வைத்தல்.

## (ஆ) ஏனைய பணிகள்

**அ.** வீட்டுக் கடன் வழங்குதல் மற்றும் ஒருங்கிணைந்த உதவித்திட்டத்தின் கீழ் மீள் குடியேற்றக் கொடுப்பனவை ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வை செய்தலும்.

**ஆ.** பயங்கரவாத வன்செயல் காரணமாக பாதிப்படைந்த பொது மக்களின் சொத்துக்களுக்கு நட்டஈடு வழங்குதல்.

**இ.** பயங்கரவாத வன்செயல் காரணமாக இறந்த, காயப்பட்ட பொதுமக்களுக்கும் மற்றும் சேதமடைந்த சொத்துக்களுக்கும் இழப்பீடு வழங்குதல்.

**ஈ.** பாதிப்புற்ற அன்றேல் அழிவுற்ற வணக்கஸ்தலங்களைப் புனர்நிர்மாணம் செய்ய உதவியளித்தல்.

**உ.** திருமண சுபீட்சக் கொடுப்பனவு.

**ஊ.** தேர்தல் வன்முறையால் பாதிப்புற்றவர்களுக்கு நட்டஈடு வழங்குதல்.

**எ.** பயங்கரவாத வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுக்கடன், வியாபாரக் கடன் மற்றும் கைதொழில் கடன்களை வழங்குதல்.

**ஏ.** பயங்கரவாத வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்கும் மற்றும் யுத்தத்தினால் கனவனை இழந்த விதவைகளுக்கும் சுயதொழில் கடன் வழங்குதல்.

**ஒ.** யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பாடசாலை பிள்ளைகளுக்கு பாடசாலை உபகணம் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தல்.

**ஓ.** சுயதொழில் நிவாரணக் கடன் வழங்குதல்.

**ஔ.** வீட்டு நிவாரணக்கடன் வழங்குதல்.

## (இ) செயற்பாடுகளின் விபரங்கள்.

### *01.* <u>ஒருங்கிணைந்த நிவாரண உதவித்திட்டம்</u>

மீள் குடியேற்ற/ புனர்வாழ்வு உதவி, பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு "ஒருங்கிணைந்த நிவாரண உதவித்திட்டம்" எனும் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இதனை புனர்வாழ்வு அதிகாரசபையும், இந்த சபைக்குப் பொறுப்பான அமைச்சும் (தற்போது புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு) இணைந்து செயற்படுகின்றன. இத்திட்டம் 1983ம் ஆண்டு அவசர புனர்வாழ்வு, புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, பின்னர் 1994 மற்றும் 2002ம் ஆண்டுகளிலும் இருமுறை பாதிக்கப்பட்டோருக்கு கூடுதல் நலன்புரி நோக்கில் திருத்தியமைக்கப்பட்டது. 06.03.2003 ல் இருந்து இத்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பதத்திற்கு ஆகக் கூடிய தொகையாக 100,000.00 வழங்கப்படுகின்றது.

<u>நிரந்தர வீடமைப்பு கொடுப்பனவு ரூபா 100,000.00</u>

புனர்வாழ்வு அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் 2010 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் மேற்படி கொடுப்பனவானது ரூபா 50,000.00 ஆக இரண்டு தவணைகளில் இடம்பெயர்ந்தவர்களின் பாதிக்கப்பட்ட வீடுகளை மீள் திருத்தியமைப்பதற்காக வழங்கப்படுகின்றது.

நடப்பாண்டில் மேற்படி திட்டத்தின் கீழ் 426 குடும்பங்களுக்காக ரூபா 21,300,000.00 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இச் சகல குடும்பங்களும் பிரதானமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது வடகிழக்கு மாகாணங்களில் இருந்தாகும்.

## 2. புனர்வாழ்வு உதவிகள்

### *2.1* <u>மரணம், காயம் என்பவற்றுக்கான நட்டஈடு வழங்கல்</u>

**(அ) அரச / கூட்டுத்தாபன ஊழியருக்கான நட்டஈடு**

- ***<u>மரணத்திற்கான நட்டஈடு</u>***

  அரச/கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு பயங்கரவாத நடவடிக்கைகளினால் மரணம் ஏற்படின், அத்தகைய ஊழியர்களில் தங்கியுள்ளோர்/நெருங்கிய உறவினர்களுக்கு ரூபா.*200,000.00* இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

- ***<u>காயங்களுக்கான நட்டஈடு</u>***

  பயங்கரவாத செயற்பாடுகளினால் காயமடையும் அரச / கூட்டுத்தாபன ஊழியர்களின் அவர்களுக்கு ஏற்பட்ட காயத்தின் வீதத்தை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவரினால் வழங்கப்படும் மருத்துவ சான்றிதழின் அடிப்படையில், ஆகக் கூடுதல் தொகையாக ரூபா.*100,000.00* நட்டஈடாகப் பெறத் தகுதியுடையோராவார்.

  இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் *24* நபர்களுக்கு ரூபா.*2,700,000.00* வழங்கப்பட்டுள்ளது.

**(ஆ) <u>அதிமுக்கிய பிரமுகர்களுக்கான நட்டஈடு</u>**

***(i)*** ***<u>மரணத்திற்கான நட்டஈடு</u>***

இந்த திட்டத்தின் கீழ் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், உள்ராட்சிமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சிமன்ற தேர்தல்களில் தோல்வியுற்ற அபேட்சகர்கள் ஆகியோருக்கு பயங்கரவாத செயற்பாடுகளினால் மரணம் சம்பவிக்கும் பட்சத்தில், அவர்களில் தங்கியுள்ளோர் / நெருங்கிய உறவினர்களுக்கு ஆகக்கூடிய தொகையாக ரூபா.*500,000.00* இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

***(ii)*** ***<u>காயங்களுக்கான நட்டஈடு</u>***

மேலே (i) இல் குறிப்பிட்டுள்ள பிரமுகர்கள் பயங்கரவாத செயற்பாடுகளினால் காயமுற்றிருப்பின் மருத்துவ சான்றிதழ் ஒன்றின் அடிப்படையில் ஆகக்கூடிய தொகையாக ரூபா. *500,000.00* நட்டஈடாகப் பெறத் தகுதியுடையோராவார்.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் எந்தவொரு நபர்களுக்கும் நட்டஈடு வழங்கப்படவில்லை.

## (இ) <u>கடும் பாதிப்புற்றோருக்கான நட்டஈடு</u>

### *(i)* *<u>மரணத்திற்கான / காயங்களுக்கான நட்டஈடு</u>*

பயங்கரவாத வன்செயல், இக்கலவரம், மக்களிடையே ஏற்படும் மோதல்கள் மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளினால் மரணமடையும் பொதுமக்களில் தங்கியுள்ளோர் / நெருங்கிய உறவினர்களுக்கு அல்லது அதனால் காயமடையும் ஒருவருக்கு இந்நட்டஈட்டுக் கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் கீழ் குறிப்பட்டுள்ளதன் பிரகாரம் நட்டஈடு வழங்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| இறப்பிற்கு இழபீடாக | - | ரூபா 100,000.00 |
| காயத்தற்கு ஆகக்கூடிய தொகையாக | - | ரூபா 50,000.00 |

மருத்துவ சான்றிதழின் அடிப்படையில் காயத்தின் வீதத்தின் பிரகாரம் நட்டஈடானது தீர்மானிக்கப்படுகின்றது)

இந்தத் திட்டத்தின் கீழ் 259 நபர்களுக்கு ரூபா.23,952,500.00 நடப்பாண்டில் வழங்கப்பட்டது.

## 2.2 <u>பாதிக்கப்பட்ட / அழிவுற்ற சொத்துக்களுக்கான நட்டஈடு</u>

### (அ) பாதிக்கப்பட்ட அரச ஊழியரின் சொத்துக்களுக்கான நட்டஈடு.

1987 ம் ஆண்டு ஜுலை / ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற இன வன்முறைகள், பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் அதன் பின்னர் நடைபெற்ற, நடைபெறும் இத்தகை வன்முறைகள் என்பவற்றில் தம் சொத்துக்கள் பாதிப்புற்ற அரச / கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு 49/89 சுற்றறிக்கையின் பிரகாரம் ஆகக் கூடிய நட்டஈட்டுத் தொகையாக ரூபா.150,000.00 ஐ பெற உரித்துடையோராவார்.

இந்தத் திட்டத்தின் கீழ் 149 நபர்களுக்ககு ரூபா.13,448,279.00 நடப்பாண்டில் வழங்கப்பட்டது.

### (ஆ) <u>அதிமுக்கிய பிரமுகர்களுக்கான நட்டஈடு</u>

மேலே (அ) இல் குறிப்பிட்டுள்ளவாறான வன்முறைகளில் தம் சொத்துக்கள் பாதிப்புற்ற/ அழிவுற்ற அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், உள்ளுராட்சிமன்ற உறுப்பினர்கள், மேலும் பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி மன்ற தேர்தல்களில் தோல்வியுற்ற அபேட்சகர்கள் ஆகியோர் ஆகக் கூடிய நட்டஈட்டுத் தொகையாக முறையே ரூபா. 500,000.00 மற்றும் 150,000.00 உச்ச தொகைக்கு அமைவாக பெறத் தகுதியுடையோராவார்.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் எந்தவொரு நபர்களுக்கும் நட்டஈடு வழங்கப்படவில்லை.

**(இ) பயங்கரவாததினால் சேதமடைந்த/ அழிவுற்றபொது மக்களுகளின் சொத்துக்களுக்கான நட்டஈட்டு கொடுப்பனவு.**

மேலே (அ) மற்றும் (ஆ) இரண்டிலும் குறிப்பிடாத பொது மக்களது சொத்துக்கள், வாகனங்கள் பாதிப்புற்றிருப்பின் / அழிவுற்றிருப்பின், அவற்றுக்கான நட்டஈடாக ஏற்பட்ட இழப்பீட்டில் 20% கொடுப்பனவு, உச்ச தொகையாக 100,000.00 இதில் எது குறைவானதோ அதைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையோராவார்.

1983ம் ஆண்டு ஜூலைக் கலவரம் மற்றும் அதன்பின்னர் ஏற்பட்ட இழப்புக்களுக்கான நட்டஈடாக இது வழங்க முடியும், இந்நட்டஈட்டுத் திட்டமானது அமுல்படுத்தப்பட்டிருப்பது 1996.02.16 திகதியிலிருந்தாகும்.

இவ்வருடத்தில் 201 நபர்களுக்கு ரூபா.13,378,737.00 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.

## 2.3 <u>பயங்கரவாத்தினால் சேதமடைந்த /அழிவுற்ற வணக்கஸ்தலங்களை மீள் நிர்மாணம் செய்தல்.</u>

பயங்கரவாத நடவடிக்கையினால் பாதிப்புற்ற அன்றேல் அழிந்த வணக்கஸ்தலங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான உதவி இச்சபையினால் வழங்கப்படுகிறது. முற்றாக அழிந்து போன வணக்கஸ்தலங்களுக்கு ஆகக் கூடிய தொகையாக ரூபா.1,000,000.00 உம் மற்றும் பகுதி சேதமுற்ற வணக்கஸ்தலங்களுக்கு ஆகக் கூடிய தொகையாக ரூபா.500,000.00 உம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் நடப்பு வருடத்தில் 02 வணக்கஸ்தலத்துக்கு ரூபா.200,000.00 வழங்கப்பட்டது.



புனர் நிர்மாணம் செய்யப்பட்ட வைரவர் இந்து கோவில் - கிளிநொச்சி

## 03 திருமண சுபிட்சக் கொடுப்பனவு

பயங்கரவாத வன்செயல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட வன்செயல்களின் காரணமாக பாதிக்கப்பட்டு அரச நலன்புரி நிலையங்களில் குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் வாழ்ந்து அல்லது வாழ்ந்திருந்த போது திருமணமான ஒரு நபருக்கு ரூபா. 12,500.00 நிவாரணமாக பெற உரித்துடையவராவர்.

குறைந்த மட்டத்தில் வருமானம் பெறும் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக இத்திட்டத்தின் கீழ் நிவாரணமானது வழங்கப்படுகின்றது. திருமணமான இருவரும் அரசினால் நடாத்தப்படும் நலன்புரி நிலையங்களில் வாழ்பவர்களாயின் ரூபா. 25,000.00 கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். இந்நிவாரணத்திட்டம் 1995 ம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் ஒரு குடும்பத்திற்காக ரூபா 25,000.00 உதவிக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது.

## 04. புனர்வாழ்வு கடன் திட்டங்கள்

### (i) கைத்தொழில் கடன்

பயங்கரவாத வன்செயல் காரணமாக பாதிப்படைந்த பதிவு செய்துள்ள கைத்தொழிலொன்றை மீள் புனர்நிர்மாணம் செய்வதற்காக 9% வட்டியுடன் மீளச் செலுத்தும் காலம் 10 வருடங்களின் கீழ் ஒரு கைத்தொழில் நிறுவனத்திற்கு ரூபா 5 மில்லியன் வழங்கப்படுகின்றது. கடன் வழங்குதல் மற்றும் மீளப்பெறல் இலங்கை வங்கியின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் ஒரு கைத்தொழிலுக்காக ரூபா 15,000,00.00 கடனாக வழங்கப்பட்டுள்ளது.



கைத்தொழில் கடன் திட்டத்தின் கீழ் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நடாத்தப்படுகின்ற திரு.வீ.சன்முகலிங்கம் என்பவரின் அலுமினிய தொழிற்சாலை தெல்லிப்பலை - யாழ்ப்பாணம்.

### *(11) சுயதொழில் கடன்திட்டம்*



திரு.பி.சுகந்திரன் என்பவரினால் நடாத்ப்படுகின்ற "ஹெப்பி டைம்" குளிர்பான சாலை மான்குளம் - முல்லைத்தீவு.



திரு.சன்முகராசா என்பவரினால் சுயதொழில் செய்யப்படுகின்ற எண்ணெய் சுத்தகரிப்பு காரைநகர் - யாழ்ப்பாணம்.



திரு.உதயசுதா என்வரினால் நடாத்தப்படுகின்ற சிகை அலங்கார நிலையம் மான்குளம்- முல்லைத்தீவு.



திரு.சுகந்திரன் என்வரினால் நடாத்தப்படுகின்ற டயர் கடை தெல்லிப்பளை –யாழ்ப்பாணம்.

பயங்கரவாத வன்செயல், யுத்த சூழ்நிலை மற்றும் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் யுத்தத்தின் காரணமாக கணவனை இழந்த விதவைகளுக்கும் நிவாரணம் வழங்கும் பொருட்டு இப்புதிய கடன் திட்டத்திற்கு 2010ம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு 4% வட்டியில் 10 வருடங்களில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் மற்றும் ஒரு வருட நிவாரணக் காலத்தின் கீழ் பெற்றுக் கொள்ள முடியுமானதுடன், ஆகக் கூடிய தொகையாக ரூபா. 250,000.00 வழங்கப்படுகின்றது. குறிப்பாக இக்கடன் வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே வழங்கப்பட்டு வருகின்றன. கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையின் மூலம் காட்டுவது மாவட்ட அடிப்படையில் கைத்தொழிலுக்காக 2013 ம் ஆண்டு வழங்கப்பட்ட கடன்களின் புள்ளி விபரமாகும்.

**புனர்வாழ்வளிக்கப்பட்ட பயிலுனர்களுக்கான அமுல்படுத்தப்படும் சுயதொழில் நிவாரணக் கடன் திட்டம்**

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அலுவலகத்தின் கீழ் புனர்வாழ்வளிக்கப்பட்ட பயிலுனர்களுக்கான அமுல்படுத்தும் சுயதொழில் கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 2012.01.31ம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன் திட்டத்திற்காக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரினால் 2012.04.25ம் திகதியில் சுற்றறிக்கை வெயியிடப்பட்டுள்ளது.

இக்கடன் திட்டத்தின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு

I. ஆகக்கூடிய கடன் தொகை ரூபா 250,000.00 ஆகும்.
II. வருடாந்த வட்டி வீதம் 4% ஆகும்.
III. ஒரு வருட நிவாரணக் காலம்
IV. கடனை மீளப் பெறும் காலம் 10 வருடங்களாகும்.

கடன் வழங்குதல் மற்றும மீளப் பெறல் கீழ் குறிப்பிட்டுள்ள நிதி நிறுவனங்களாகும்.

I. இலங்கை வங்கி
II. மக்கள் வங்கி
III. ஸ்ரீ லங்கா சேமிப்பு வங்கி

2012ம் ஆண்டில் பின்வரும் சுயதொழில் திட்டங்களுக்காக 1086 பயனாளிகளுக்கு ரூபா. 178,605,000.00 தொகை கடனாக வழங்கப்பட்டுள்ளது. விபரம் கீழ் வருமாறு

| இல | சுயதொழில் திட்டங்கள் | வழங்கப்பட்ட எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | விவசாயம் | 250 | 35,620,000.00 |
| 2 | கால்நடை | 104 | 15,815,000.00 |
| 3 | மீன்பிடி | 91 | 19,325,000.00 |
| 4 | சிறு வியாபாரம் | 387 | 62,030,000.00 |
| 5 | தொழிநுட்பம் | 99 | 16,650,000.00 |
| 6 | கைத்தொழில் | 24 | 3,975,000.00 |
| 7 | சேவைகள் | 28 | 4,990,000.00 |
| 8 | வீட்டுடன் தொடர்புடைய கைத்தொழில் | 9 | 1,450,000.00 |
| 9 | உபகரணங்களை கொள்வனவு செய்தல் | 47 | 9,050,000.00 |
| 10 | வாகனங்களை கொள்வனவு செய்தல் | 47 | 9,700,000.00 |
| | **முழுத் தொகை** | **1086** | **178,605,000.00** |

| இல. | மாவட்டம் | வழங்கப்பட்ட எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | வவுனியா | 23 | 3,425,000.00 |
| 2 | மன்னார் | 09 | 1,550,000.00 |
| 3 | கிழிநொச்சி | 06 | 975,000.00 |
| 4 | முல்லைத்தீவு | 34 | 5,970,000.00 |
| 5 | யாழ்ப்பாணம் | 47 | 7,125,000.00 |
| 6 | மட்டக்களப்பு | 74 | 9,466,000.00 |
| 7 | திருகோணமலை | 78 | 11,360,000.00 |
| 8 | அம்பாறை | 600 | 15,000,000.00 |
| 9 | கொழும்பு | 7 | 1,425,000.00 |
| | **மொத்தம்** | **878** | **56,296,000.00** |

*(111)* <u>**வீட்டுத்திட்டக் கடன்**</u>

2010ம் ஆண்டில் இக்கடன் திட்டத்திற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்கடனானது பயங்கரவாத வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்ட விதவைகள் மற்றும் நபர்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 4% வட்டியில் 10 வருடங்களில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் ஒரு வருட நிவாரணக் காலத்துடன் ஆகக் கூடிய தொகையாக ரூபா. 250,000.00 வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 15 பயனாளிகளுக்கு ரூபா. 3,300,000.00 வழங்கப்பட்டுள்ளது.

| இல. | மாவட்டம் | வழங்கப்பட்ட எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | வவுனியா | 01 | 250,000.00 |
| 2 | மன்னார் | 08 | 1,650,000.00 |
| 3 | திருக்கோணமலை | 05 | 1,150,000.00 |
| 4 | யாழ்ப்பாணம் | 01 | 250,000.00 |
| | மொத்தம் | 15 | 3,300,000.00 |



திரு.குணசீலன் என்பவரினால் சுயதொழிலுக்காக நடாத்தப்படுகின்ற டெயிலர் கடை முல்லியாவளை-முல்லைதீவு.



திரு.கந்தசாமி என்பவரினால் செய்யப்படுகின்ற மர அரியும் தொழிற்சாலை யாழ்ப்பாணம்.



திரு.சிவராசா என்பவரினால், கள்ளப்பாடு கிராமத்தில் முல்லைத்தீவில் மேற்கொள்ளப்படும் கருவாடு பதனிடல் முயற்ச்சி



திரு.என்.சோமசுந்தரனால் நடாத்தப்படுகின்ற தச்சு வேலை தளம். முல்லியவளை-முல்லைத்தீவு.

**புனர்வாழ்வு அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதியு திட்டங்கள்**

(V) <u>**புனரமைக்கப்பட்ட சூழல் நட்புறவுக் கிராமம் அமைத்தல்**</u>

கீழ் குறிப்பிட்டுள்ள கிராமங்களில் வீடுகள் மீள்நிர்மாணம் நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், அதிகாரசபை மூலம் 250 வீடுகளுக்காக வீட்டு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

| **மாவட்டம்** | **பிரதேச செயலாளர் பிரிவு** | **கிராமத்தின் பெயர்** | **குடும்ப எண்ணிக்கை** |
|---|---|---|---|
| அம்பாறை | மகஓய | சமகிபுர | 100 |
| வவுனியா | வவுனியா | பரநாட்டகல் | 100 |
| மட்டக்களப்பு | வவுனதீவு | காந்திநகர் | 50 |

**02. கிராமங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கல்**

ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தின் கீழ் அமைச்சுக்களின் காணப்படும் பல்வேறு நிறுவனங்களின் மூலம் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மூலம் இந்நடவடிக்கை மேற்கொள்வதுடன், திட்டங்கள் முன்னெடுத்தச் செல்லப்படுகின்றன.

**03. மாவட்டங்களினூள் நடவடிக்கை**

மேற்படி நடவடிக்கை மேற்கொள்வதற்காக மாவட்ட மட்டங்களில் புனர்வாழ்வு நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக புனர்வாழ்வு உதவியாளர்களை நியமித்துள்ளதுடன், அவர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் திருகோணமலை மாவடடங்களில் கடமையில் ஈடுபடுத்தியுள்ளது. அதற்கு மேலாக புனர்வாழ்வு அதிகாரசபையின் உப அலுவலகமொன்று வவுனியா கச்சேரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதன்மூலம் வடமாகாணத்துடன் இணைந்து நடவடிக்கைகள் மிக சக்தி வாய்ந்ததாக காணப்படுகிறது.

**ஈ.ஏ. சமரசிங்க,**
தலைவர்,
புனர்வாழ்வு அதிகாரசபை.

**புனர்வாழ்வு அதிகாரசபை (றெப்பியா),**

*இல. 59, டீ. எஸ். சேனாநாயக்க மாவத்தை,*

*கொழும்பு- 08.*

**ஆட்களையும், ஆதனங்களைம் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை**

**2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான அறிக்கை**

| விபரங்கள் | குறிப்பு | 2012 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|---|
| **வருமானம்** | | **98,933,560.77** | **110,235,080.17** |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி | 01 | 86,451,000.00 | 94,200,000.00 |
| வட்டி | 02 | 12,468,160.77 | 13,565,806.02 |
| சொத்துக்களின் விற்பனை இலாபம் | | | 2,434,394.15 |
| நானாவித வருமானம் | | 14,400.00 | 34,880.00 |
| **செலவினங்கள்** | | **100,216,577.63** | **106,017,745.37** |
| **பொது நிர்வாக செலவினங்கள்** | | **46,487,061.63** | **45,959,226.37** |
| **தனிப்பட்ட ஊதியம்** | 03 | 26,683,183.15 | 23,471,067.44 |
| **பிரயாணம்** | 04 | 180,999.50 | 290,868.50 |
| **விநியோகம்** - பாவனைப் பொருள் | 05 | 3,268,005.28 | 2,771,852.59 |
| நிலையான சொத்துப் பராமரிப்பு | 06 | 2,125,444.51 | 2,808,936.79 |
| ஒப்பந்த சேவைகள் | 07 | 9,981,866.83 | 10,345,502.54 |
| ஏனைய மீண்டும் வரும் செலவினங்கள் | 08 | 1,679,039.35 | 5,292,875.61 |
| பெறுமானத் தேய்வு | 09 | 2,568,523.01 | 978,122.90 |
| **செயற்பாட்டு நடவடிக்கை** | | **53,729,516.00** | **60,058,519.00** |
| கடும் பாதிப்புற்றோருக்கான நட்டஈடு | 10 | 26,677,500.00 | 25,997,500.00 |
| சொத்திழப்பு நட்டஈடுகள் | 11 | 27,027,016.00 | 33,876,019.00 |
| ஏனைய சேமநலன்கள் | 12 | 25,000.00 | 185,000.00 |
| **வருமானத்தை விஞ்சிய செலவினம்** | | **(1,283,016.86)** | **4,217,334.80** |

கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதி அறிக்கையின் முக்கிய ஒரு அம்சமாகும் அடைப்புக் குறிக்குள் உள்ள தொகைகள் கழித்ததாகக் காட்டப்படல் வேண்டும்.

**ஆட்களையும், ஆதனங்களைம் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை**
***(1987ம் ஆண்டின் 29ம் இலக்க பாராளுமன்ற சட்டத்தால் ஸ்தாபிக்கப்பட்டது)***

*2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலவரம் தொடர்பான அறிக்கை*

| விபரங்கள் | குறிப்பு | 2012 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | ***1,316,945,694.39*** | ***1,300,157,110.25*** |
| அசையாத சொத்துக்கள் | 13 | 216,974,057.17 | 197,411,082.73 |
| நீண்ட கால முதலீடுகள் | 14 | 857,334,767.63 | 882,089,770.13 |
| அறவிடக் கூடிய கடன்கள் | 15 | 73,647,007.21 | 73,647,007.21 |
| திறைசேரி இருப்புக்கள் | | 73,920,691.06 | 73,920,691.06 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 16 | 95,069,171.32 | 73,088,559.12 |
| **பொறுப்புக்கள்** | | ***1,316,945,694.39*** | ***1,300,157,110.25*** |
| திரண்ட நிதி | | 337,274,316.48 | 334,299,336.92 |
| வருடத்தின் தேறிய நிதி மீதி (பற்றாக்குறை) | | (1,283,016.86) | 4,217,334.80 |
| வருட இறுதியில் திரண்ட நிதி | | 335,991,299.62 | 338,516,671.72 |
| மீள் மதிப்பீட்டு மீதி | | 5,738,374.50 | 5,738,374.50 |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி | | 198,996,000.00 | 177,296,000.00 |
| சேமநல ஒதுக்கீடு | | 8,022,924.60 | 4,832,555.00 |
| அசையாப் பொறுப்புக்கள் | 17 | 764,844,380.00 | 765,396,770.00 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 18 | 3,352,715.67 | 8,376,739.03 |

கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதி அறிக்கையின் முக்கியமான ஒரு அம்சமாகும்
அடைப்புக் குறிப்புக்கள் உள்ள தொகைகள் கழித்ததாகக் காட்டப்படல் வேண்டும்.

**ஈ.ஏ.சமரசிங்க**
தலைவர்

**எஸ்.என்.சி.டப்லியு.எம்.தர்மகீர்த்தி**
உதவிப் பணிப்பாளர் (நிதி)

**ஜி.எஸ். வித்தானகே**
செயலாளர்,
புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு.

## ஆட்களையும், ஆதனங்களைம் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை

### 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று அறிக்கை

| விபரங்கள் | குறிப்பு | 2012 (ரூபா) |
|---|---|---|
| **செயற்பாடுகளின் நிதிக்கூற்று** | | |
| தேறிய மேலதிக மீதி /(பற்றாக்குறை) | A | ***(1,283,016.86)*** |
| செயற்படாத காசு மீதி | | |
| கூட்டல் - பெறுமானத் தேய்வுக்கான ஒதுக்கம் | | *2,568,523.01* |
| சேமநிதிக்கான ஒதுக்கம் | | *3,190,369.60* |
| கழித்தல் - ஏனைய வேறுபாடுகள் | B | *(13,705,945.44)* |
| **முன்யை தேறிய மீதி (பற்றாக்குறை)** | | ***(9,230,069.69)*** |
| நடைமுறை சொத்துக்களின் அதிகரிப்பு | C | *(1,251,040.83)* |
| நடைமுறை சொத்துக்கள் குறைவடைதல் | D | *(5,024,023.36)* |
| **செய்முறை நடவடிக்கைகளின் நிதிப்பாய்ச்சல்** | | ***(15,505,133.88)*** |
| **முதலீடுகளின் நிதிப்பாய்ச்சல்** | | ***17,441,428.09*** |
| கடன் மீளப்பெறல் | E | *2,900,751.03* |
| முதலீடுகள் | F | *24,755,002.50* |
| நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் | G | *(21,812,070.95)* |
| முதலீடுகளின் வருமானம் | H | *11,597,745.51* |
| **மூலதன நடவடிக்கைகளின் நிதிப்பாய்ச்சல்** | | ***21,700,000.00*** |
| திறைசேரிக்கு வழங்கிய நிதி | | |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற நிதி | | ***21,700,000.00*** |
| **நிதி மற்றும் நிதிக்கு சமமான - தேறிய அதிகரிப்பு / குறைவடைதல்** | | ***23,636,294.21*** |
| **காலகட்ட ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்கு சமமான** | I | ***10,779,640.46*** |
| **காலகட்ட இறுதியில் நிதி மற்றும் நிதிக்கு சமமான து** | J | ***34,415,934.67*** |

கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதி அறிக்கையின் முக்கிய ஒரு அம்சமாகும் அடைப்புக் குறிக்குள் உள்ள தொகைகள் கழித்ததாகக் காட்டப்படல் வேண்டும்.

**2012.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமைகள் மற்றும் வேறுபாடு தொடர்பான அறிக்கை**

| | **ஒருங்கிணைந்த நிதியம்** | **சேமகால ஒதுக்கீடு** | **மீள்மதீப்பீட்டு வருமானம்** | **மொத்தம் (ரூபா)** |
|---|---|---|---|---|
| *2012.01.01 திகதியின் மீதி* | *338,516,671.72* | *4,832.555.00* | *5,738,374.50* | *349,087,601.22* |
| வருடத்திற்குரிய ஒதுக்கம் (தேறிய) | - | *3,190,369.60* | - | *3,190,369.60* |
| முன்னைய வருட செலவினம் | *(1,255,855.24)* | - | - | *(1,255,855.24)* |
| முன்னைய வருட வருமானம் | *13,500.00* | - | - | *13,500.00* |
| 2011ம் வருட தேறிய சேமிப்பு | *(1,283,016.86)* | - | - | *(1,283,016.86)* |
| **2011.12.31ம் திகதியின் மீதி** | **335,991,299.62** | **8,022,924.60** | **5,738,374.50** | **349,752,598.72** |

நிதி அறிக்கைக்கான குறிப்பு

| | விபரங்கள் | 2012 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|---|
| 01. | **திறைசேரி வரவு** | **86,451,000.00** | **94,200,000.00** |
| | திறைசேரி நிதி அளிப்பு –மீண்டெழும் செலவு | **86,451,000.00** | 94,200,000.00 |
| 02 | வட்டி | 12,468,160.77 | 13,565,806.02 |
| | ரூபா 200,000.00 இலங்கை வங்கிக் கடனுக்கான வட்டி | | 115,061.65 |
| | கடன் வழங்கும் நிதி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற வட்டி | | |
| | இலங்கை வங்கி | 1,255,000.00 | 3,587,602.71 |
| | மக்கள் வங்கி | 3,500,535.63 | 3,880,500.00 |
| | வீட்டு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 377,742.23 | 430,139.49 |
| | ஹற்றன் நெஷனல் வங்கி | 75,000.00 | 120,000.00 |
| | அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 200,000.00 | 200,000.00 |
| | தேசிய வீடமைப்பு அதிகாரசபை | 1,869,045.00 | 1,920,000.00 |
| | புதிய கடன் திட்டம் - இலங்கை வங்கி | 4,050,162.07 | 2,223,876.65 |
| | சேமநல முதலீட்டுக்கான வட்டி | 361,151.58 | 359,848.66 |
| ஊழியர் கடனுக்கான வட்டி | | | |
| சொத்துக்கள் கடன் | | 532,952.14 | 448,980.59 |
| நிவாரணக் கடன் | | 244,552.52 | 277,868.47 |
| விசேட முற்பணம் | | 2,019.60 | 1,927.80 |
| 03. | தனிப்பட்ட ஊதியம் | 26,683,183.15 | 23,471,067.44 |
| | அலுவலர்களின் ஊதியம் | 12,109,012.03 | 12,622,113.47 |
| | ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவு | 2,215,524.42 | 2,010,286.45 |
| | ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவு | 553,881.08 | 502,571.36 |
| | ஓய்வூதியப் பங்களிப்பு | - | 145,058.95 |
| | மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவு | 740,237.89 | 976,979.47 |
| | வாழ்வாதாரக் கொடுப்பனவு | 3,948,262.50 | 3,992,362.50 |
| | தலைவருக்கான கொடுப்பனவு | 600,000.00 | 520,000.00 |
| | செயற்பாட்டுப் பணிப்பாளருக்கான கொடுப்பனவு | 460,000.00 | 240,000.00 |
| | பணிப்பாளர் சபைக்கான கொடுப்பனவு | 52,000.00 | 77,000.00 |
| | பணிப்பாளர் சபையின் செலளாருக்கான கொடுப்பனவு | 48,000.00 | 48,000.00 |
| | அனுமதித்தல் தொடர்பான கொடுப்பனவுகள் | 1,592.10 | 145,058.95 |
| | விஷேட கொடுப்பனவுகள் | 1,755,807.97 | 620,139.49 |
| | வேறு கொடுப்பனவுகள் | 753,769.33 | 754,080.50 |
| | மொழித்திறன் கொடுப்பனவுகள் | 95,152.80 | 88,431.30 |
| | சேமநல செலவினம் | 3,349,943.03 | 728,985.00 |

| | | | |
|---|---|---|---|
| 04. | பிரயானச் செலவினம் | 180,999.50 | 290,868.50 |
| | பிரயாணச் செலவினம் - உள்ளூர் | 180,999.50 | 290,868.50 |
| 05. | விநியோகம் மற்றும் பாவனை உபகரணம் | 3,268,005.28 | 2,771,852.59 |
| | காகிதாகிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 952,567.72 | 818,611.88 |
| | எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் | 2,139,809.56 | 1,778,240.71 |
| | சீருடைகள் | 67,928.00 | 65,380.00 |
| | புதினத் தாள் மற்றும் சஞ்சிகைகள் | 107,700.00 | 109,620.00 |
| 06 | நிலையான சொத்துக்களின் பராமரிப்பு | 2,125,444.51 | 2,808,936.79 |
| | நிலையான சொத்துக்களின் புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு | 488,130.04 | 280,094.45 |
| | வாகனங்களை புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு | 1,637,314.47 | 2,528,842.34 |
| 07. | ஒப்பந்த அடிப்படையிலான சேவைகள் | 9,981,866.83 | 10,345,502.54 |
| | தொலைபேசிக் கட்டணம் | 487,634.00 | 551,378.51 |
| | தபால் கட்டணம் | 376,297.00 | 305,754.00 |
| | மின்சாரம் மற்றும் ஏனைய வசதிகள் | 1,001,268.48 | 972,014.40 |
| | வாடகை | 5,100,000.00 | 5,025,000.00 |
| | வாகனங்களுக்கான வாடகை | 1,114,731.60 | 1,167,741.00 |
| | அச்சகக்கட்டணம் | 594,892.80 | 1,106,155.63 |
| | விருந்தோம்பல் | 1,137,042.95 | 1,047,459.00 |
| | கணக்காய்வுக் கட்டணம் | 150,000.00 | 150,000.00 |
| | வரிகளுக்கான வட்டி | 20,000.00 | 20,000.00 |
| 08. | ஏனைய மீண்டும் வரும் செலவினங்கள் | 1,679,039.35 | 5,292,875.61 |
| | கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் | 145,134.50 | 150,000.00 |
| | ஊழியருக்கான வைத்திய காப்புறுதிக் கட்டணம் | 447,176.40 | 409,230.32 |
| | நானாவித செலவினம் | 997,901.75 | 4,306,538.79 |
| | நலன்புரிச் சங்கம் | 49,900.80 | 117,977.00 |
| | நீதிச் செலவு | - | 114,500.00 |
| | வட்டி – தேசிய அபிவிருத்தி வங்கி | 38,925.90 | 194,629.50 |
| 09. | பெறுமானத் தேய்வு – வருட ஆரம்பம் | 2,568,523.01 | 978,122.90 |
| | பெறுமானத் தேய்வு – மோட்டார் வாகனம் | 1,562,633.00 | 32,047.43 |
| | பெறுமானத் தேய்வு – தளபாடம் அலுவலக உபகரணங்களை பொருத்துதல் | 270,548.66 | 317,468.14 |
| | பெறுமானத் தேய்வு – அறைகளாகப் பிரித்தல் | 116,196.00 | 152,266.00 |
| | பெறுமானத் தேய்வு – தொலைபேசி | 36,170.84 | 42,670.40 |
| | பெறுமானத் தேய்வு – இயந்திரம் | 193,228.00 | 175,262.43 |
| | பெறுமானத் தேய்வு – கணனிகள் | 312,134.90 | 258,408.50 |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத் தேய்வு – குளிரூட்டிகள் | 77,611.61 | - |
| 10. | கடும் பாதிப்புற்றோருக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு | 26,677,500.00 | 25,997,500.00 |
| | அரச ஊழியர் | 3,450,000.00 | 6,195,000.00 |
| | பொது மக்கள் | 23,227,500.00 | 19,802,500.00 |
| 11. | பாதிப்படைந்த சொத்துக்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு | 27,027,016.00 | 33,876,019.00 |
| | அரச ஊழியர் | 13,448,279.00 | 17,473,674.00 |
| | பொது மக்கள் | 13,378,737.00 | 15,402,345.00 |
| | வணக்கஸ்தலங்கள் | 200,000.00 | 1,000,000.00 |
| 12. | ஏனைய நலன்புரி நடவடிக்கைகள் | 25,000.00 | 185,000.00 |
| | திருமண சுபீட்சக்கொடுப்பனவு | 25,000.00 | |
| | பாடசாலை மாணவர்களுக்கான கொடுப்பனவு | - | 185,000.00 |
| 13. | அசையாத சொத்துக்கள் | 216,974,057.17 | 197,411,082.73 |
| | கிரயம் | | |
| | வருட ஆரம்ப மதிப்பீடு | 25,189,552.85 | 20,390,439.18 |
| | வருடத்தினுள் சேர்க்கப்பட்டவை | 1,181,497.45 | 7,107,507.17 |
| | வருடத்தினுள் நீக்கப்பட்டவை | | 2,308,393.50 |
| | சொத்தின் பெறுமதி | | |
| | வருட இறுதி மதிப்பீடு | 26,371,050,30 | 25,189,552,85 |
| | பெறுமானத் தேய்வு | 15,341,555.12 | 16,650,830.12 |
| | கூட்டல் - வருடத்தின் பெறுமானத் தேய்வு | 2,568,523.01 | 978,122.90 |
| | நாட்குறிப்பு பதிவு .இல.02 | 350,000.00 | |
| | கழித்தல் - வருடத்தின் மாற்றீடு | | 2,287,397.90 |
| | வருட இறுதி மதிப்பீடு | 18,260,078.13 | 15,341,555.12 |
| | தேறிய புத்தக மதிப்பீடு<br>வருட இறுதி மதிப்பீடு<br>(இல. 1 – 12 பார்க்கவும்) | 8,110,972.17 | 9,847,997.73 |
| | வீட்டு நிவாரணத்திற்கான மூலதன அன்பளிப்பு | 208,863,085.00 | 187,563,085.00 |
| 14. | நீண்ட கால முதலீடுகள் | 857,334,767.63 | 882,089,770.13 |
| | ஒன்றிணைந்த நிவாரணத் திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களினால் கிடைக்கப்பட்ட நிதி (இணைப்பு 13 – 1) | 852,502,212.63 | 877,762,212.63 |
| | சேமநல முதலீடு | 4,832,555.00 | 4,327,557.50 |

| | | | |
|---|---|---|---|
| 15. | .கடன் மீளப் பெறல் | 73,647,007.21 | 73,647,007.21 |
| | ரூபா 200,000.00 இலங்கை வங்கியின் வியாபாரக்கடன் | 4,681,213.68 | 4,681,213.68 |
| | ரூபா 25,000.00 இலங்கை வங்கியின் சொத்துக்கடன் | 67,341,609.58 | 67,341,609.58 |
| | கடனுக்கான ஒதுக்கம் | (6,736,352.14) | (6,736,352.14) |
| | ரூபா 10,000.00 இலங்கை வங்கியின் சுயதொழிலுக்கான கடன் | 9,289,484.54 | 9,289,484.54 |
| | கடனுக்கான ஒதுக்கம் | (928,948.45) | (928,948.45) |
| 16. | அசையும் சொத்துக்கள் | 95,069,171.32 | 73,088,559.12 |
| | சொத்துக்கடன் | 9,277,091.74 | 10,708,028.00 |
| | ஊழியர் கடன் | 4,938,404.53 | 6,162,549.39 |
| | அனர்த்தக் கடன் | 45,494.91 | 286,864.82 |
| | பண்டிகைக் கால முற்பணம் | 89,000.00 | 93,300.00 |
| | கடன் வழங்கும் நிறுவனங்களில் கிடைக்கப் பெற்ற வட்டி | 43,870,837.96 | 43,062,118.85 |
| | சேமலாப முதலீடுகளிலிருந்து கிடைக்க வேண்டிய வட்டி | 557,348.66 | 515,652.51 |
| | கிடைக்க வேண்டிய அறவீடுகள் | 239,612.06 | 182,330.03 |
| | முன்னையக் கொடுப்பனவுகள் | 347,921.48 | 91,748.82 |
| | இருப்பு (காகிதாகிகள்) | 377,525.31 | 296,326.24 |
| | கடன்பட்டோர் | 910,000.00 | 910,000.00 |
| | வங்கி மீதி | 34,415,934.67 | 10,779,640.46 |
| 17. | அசையாத பொறுப்புக்கள் | 764,844,380.00 | 765,396,770.00 |
| | ஒன்றிணைந்த நிவாரணத் உதவித்திட்டத்தின் கீழ் கடன் வழங்குவதற்காக திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற முதலீடு | 764,544,380.00 | 764,544,380.00 |
| | கணக்காய்வு செலவுக்கான ஒதுக்கம் | 300,000.00 | 852,390.00 |
| 18. | அசையும் பொறுப்புக்கள் | 3,352,715.67 | 8,376,739.03 |
| | திரண்ட செலவினம் | 966,157.17 | 300,409.33 |
| | வைப்புக் கணக்கு | 2,386,558.50 | 8,076,329.70 |

# அசையாத சொத்துக்கள் -2012

| | மோட்டார் வாகனம் | தளபாடம் அலுவலக உபகரணங்களை பொருத்துதல் | இயந்திரம் | தொலை பேசி | அறைகளாகப் பிரித்தல் | கணனிகள் | குளிரூட்டிகள் | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2012.01.01ல் திகதியின் மீதி | 10,751,570.00 | 6,095,580.41 | 1,560,224.50 | 843,481.51 | 1,522,660.00 | 2,040,242.60 | 2,375,793.83 | 25,189,552.85 |
| வருடத்தினுள் கூட்டப்பட்டவை | - | 393,381.96 | - | 25,150.00 | - | 93,538.99 | 669,426.50 | 1,181,497.45 |
| வருடத்தினுள் விற்பனை செய்யப்பட்டவை | - | - | - | - | - | - | - | - |
| 2012.12.31 திகதியின் மீதி | 10,751,570.00 | 6,488,962.37 | 1,560,224.50 | 868,631.51 | 1,522,660.00 | 2,133,781.59 | 3,045,220.33 | 26,371,050.30 |
| பெறுமானத் தேய்வு 2012.01.01திகதியின் மீதி | 4,559,316.09 | 4,509,295.34 | 1,061,301.08 | 709,357.72 | 944,572.62 | 1,181,918.44 | 2,375,793.83 | 15,341,555.12 |
| நாட்குறிப்பு பதிவு- இல.02 | 350,000.00 | | | | | | | 350,000.00 |
| வருடதத்திற்கான ஒதுக்கம் | 1,562,633.00 | 270,548.66 | 193,228.00 | 36,170.84 | 116,196.00 | 312,134.90 | 77,611.61 | 2,568,523.01 |
| வருடத்தினுள் மாற்றப்பட்டவை | - | - | - | - | - | - | - | - |
| 2012.12.31 காசு மீதி | 6,471,949.09 | 4,779,844.00 | 1,254,529.08 | 745,528.56 | 1,060,768.62 | 1,494,053.34 | 2,453,405.44 | 18,260,078.13 |
| 2012.12.31 திகதிக்கு தேறிய மதீப்பீடு | 4,279,620.91 | 1,709,118.37 | 305,695.42 | 123,102.95 | 461,891.38 | 639,728.25 | 591,814.89 | 8,110,972.17 |

### 2012.12.31 திகதியில் ஒன்றிணைந்த நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட முதலீடு

| நிறுவனம் | பேரேட்டுப் பக்கம் | வீட்டுக் கடன் | வர்த்தகக் கடன் | கைத்தொழில் கடன் | சுயதொழில் கடன் | புதிய வீடமைப்புக் கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | 38, 50 | 44,500,000.00 | 2,500,000.00 | 21,000,000.00 | 369,987,000.00 | 58,502,000.00 | 496,489,000.00 |
| மக்கள் வங்கி | 41 | 193,200,000.00 | - | - | - | - | 193,200,000.00 |
| தேசிய வீடமைப்பு அதிகாரசபை | 49 | 124,603,000.00 | - | - | - | - | 124,603,000.00 |
| ஹட்டன் நெஷனல் வங்கி | 43 | 3,751,945.57 | 1,248,054.43 | - | - | - | 5,000,000.00 |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 47 | 23,210,212.63 | - | - | - | - | 23,210,212.63 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 45 | 10,000,000.00 | - | - | - | - | 10,000,000.00 |
| **மொத்தம்** | | **399,265,158.20** | **3,748,054.43** | **21,000,000.00** | **369,987,000.00** | **58,502,000.00** | **852,502,212.63** |

குறிப்பு இல.13-2

**நிதி நிறுவனங்களின் 31.12.2012 திகதிய வட்டி தொடர்பான விபரம்**

| நிதி நிறுவனங்கள் | பேரேட்டுப் பக்கம் | தொகை |
|---|---|---|
| இலங்கை வங்கி | 22 | 1,255,000.00 |
| மக்கள் வங்கி | 24 | 3,500,535.62 |
| தேசிய வீடமைப்பு அதிகாரசபை | 33 | 34,509,045.00 |
| வீட்டு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 31 | 377,824.42 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 28 | 178,270.84 |
| புதிய கடன் திட்டம் - இலங்கை வங்கி | 36 | 4,050,162.08 |
| **மொத்தம்** | | **43,870,837.96** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No: ஜேபீ/ஏ/ஆர்ஈபீஜஏ/எப்ஏ/2012/02
ඔබේ අංකය / உமது இல / Your No.
දිනය / திகதி / Date: 2014 சனவரி 31

தலைவர்,
ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைத்தல் அதிகாரசபை

**ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைத்தல் அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைத்தல் அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 29 ஆம் இலக்க ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 8(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், விபரமான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு 2013 ஒக்தோபர் 30 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

**கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்துணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைத்தல் அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்து பாவனையில் காணப்படுகின்ற ரூபா 7,491,247 தொகையான 04 சொத்து விடயங்களை மீள்கணிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 4,900,000 பெறுமதியான மோட்டார் வாகனம் கணக்குக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அதற்காக பெறுமானத் தேய்வு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் திறைசேரி வைப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 73,920,691 தொகையான மீதிகள் தொடர்பாக எந்த எழுத்து மூலச் சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் ஒன்றிணைந்த உத்தேசக் கடன் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2 வங்கிக் கணக்குகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 44.5 மில்லியன் மற்றும் ரூபா 193.2 மில்லியன் தொகையான நிதியத்திலிருந்து வங்கியினால் வழங்கப்பட்ட கடன் பணம் மற்றும் மீதிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) தாபன விதிக்கோவை | |
| (i) IV ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவு மற்றும் 2004 திசெம்பர் 24 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க முகாமைத்துவ உதவிச் சேவை பிரமாணக் | 2001 சனவரி 15 ஆந் திகதி தரவு நிரற்படுத்தும் செயற்படுத்துனர் பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தருக்காக தேவையான ஆகக் குறைந்த தகைமைகளை அடையாதிருந்த போதும் 2006 மே 09 ஆந் திகதி தொடக்கம் முகாமைத்துவ உதவியாளர் II வகுப்பிற்கு உள்ளீர்க்கப்பட்டு 12 சம்பள படிநிலைகள் |

| | |
|---|---|
| கோவை | உடைக்கப்பட்ட சம்பளத்தில் அமர்த்தி 2009 நவம்பர் 16 ஆந் திகதி சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தார். |
| (ii) XIV ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவு | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இணைந்த படிக்காக தங்குமிடத்திற்காகவும் அதற்காக செய்யப்படுகின்ற செலவினங்களையும் மீளளிப்புச் செய்வதற்காக செலுத்தப்படுகின்ற தொகையையே கருதுகின்றது. அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் பிரதேசக் கடமைகளில் ஈடுபடுகின்ற போது அதற்காக தங்குமிடம், உணவுகளுக்காக ரூபா 460,863 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்குமேலதிகமாக அப்பிரயாணத்திற்காக ரூபா 86,857 தொகையான இணைந்த படிகளும் வழங்கப்பட்டிருந்தன. |
| (iii) XXIV ஆம் அத்தியாயத்தின் 11.1 ஆம் பிரிவு மற்றும் 2005 மார்ச் 31 ஆந் திகதிய 08/2005 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | சொத்துக்கள் பொறுப்பாக வைக்கப்பட்டு நிதி நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட கடன் தொகையை தீர்ப்பதற்காக கடன் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பத்திருந்த உத்தியோகத்தருக்கு ரூபா 987,600 தொகையான ஆதனக் கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 2 ஆம் பந்தி | பல்வேறு பதவியணியினர் தரங்களில் கடமைகளின் பிரயாணங்களுக்காக ரூபா 10,500 தொகையான விசேட கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கு திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 1,283,017 பற்றாக்குறையினை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,217,335 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 5,500,352 தொகையான வீழ்ச்சிக்காக வருமானம் ரூபா 11,301,520 தொகையினாலும் நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் ரூபா 6,329,003 தொகையினாலும் குறைவடைந்தமையும், நிருவாகச் செலவினம் ரூபா 527,835 இனால் அதிகரித்தமையும் தாக்கமளித்திருந்தன.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டில் விபத்திற்குள்ளாகிய வாகனத்திற்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 44,300 தொகையான நட்டஈட்டை அறவீடு செய்துகொள்வதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் ஒன்றிணைந்த உதவி உத்தேசத்திட்டத்தின் கீழ் கடன் வசதிகளை வழங்கும் வகையில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த பணத்தின் உடன்படிக்கைக் கால எல்லை முடிவடைந்திருந்த போதிலும் அறவிடுவதற்கிருந்த ரூபா 124.3 மில்லியன் மற்றும் அதற்குரிய வட்டி என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை.

4.2 **நிதியங்களின் குறைவான பயன்பாடு**

அதிகாரசபை முதலீடு செய்திருந்த ரூபா 70,500,000 தொகையினை மீளப்பெற்று சுயதொழில் மற்றும் புதிய வீடமைப்புக் கடன் வழங்குவதற்காக ரூபா 46,989,000 தொகை மீள முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய ரூபா 23,511,000 தொகை எவ்வித முதலீட்டிலும் ஈடுபடுத்தப்படாமல் 2½ மாதம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

4.3 **ஊழியர் பணிக்கொடை ஏற்பாட்டிற்காக நிதியமொன்றைக் கட்டியெழுப்புதல்**

ஊழியர் பணிக்கொடைக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,349,943 தொகை நிதியத்தைக் கட்டியெழுப்புவதற்காக முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

5 **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

5.1 **உள்ளகக் கணக்காய்வு**

அதிகாரசபையின் சகல கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5.2 **பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கு இடையில் 3 சதவீதத்திலிருந்து 3184 சதவீதம் வரையான வீச்சிலான முரண்கள் நிலவியமையால் ஆக்கபூர்வமான முகாமைத்துக் கட்டுப்பாட்டுச் சாதனமாக பாதீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

6. ## முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வீடமைப்பு உதவிச் செயற்திட்டம்

(ஈ) இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்

எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

REP/F/1/7 2013.11.18

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி,**

கணக்காய்வாளர் திணைக்களம்,

பத்தரமுல்லை.

ஆட்களையும், ஆதனங்களையும், கைத்தொழில்களையும் புனரமைப்புச்செய்யும் அதிகாரசபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38ம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

மேலே கூறப்பட்டது சம்பந்தமாக உமது ஜே/ஏ/ஆர்ஈபிஜேஏ/எப்ஏ/2012/02 இலக்கத்தைக் கொண்ட 2013 நவம்பர் 05 திகதிய அறிக்கை சம்பந்தமான எனது கணிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

2.2. நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கருத்துரைகள்.

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்.

I. 2013ம் ஆண்டில் மீளக்கணக்கிடுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் உண்மை பெறுமதி 2013 இல் முடிவடைந்த கணக்கு மூலமாக செம்மைசெய்ய முடியும்.

II. 2013ம் ஆண்டின் முடிவடைந்த கணக்கில் சேர்க்கப்பட்டு செம்மைசெய்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்கிறேன்.

2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

I. புனர்வாழ்வு அதிகாரசபை, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம் அகியவற்றிடையே நடைப்பெற்ற கடிதத்தொடர்புகளுக்கேற்ப 2013.07.09 ந் திகதியுடைய மேற்படி மீதியானது அரச வருமானத்துடன் சேர்க்கப்படுவதற்கு திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டதுடன், 2013ம் ஆண்டின் முடிவடைந்த கணக்கு தயாரிக்கும் போது செம்மைசெய்யப்படும்.

II. மேற்படி தகவல்கள் இத்துடன் முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்கிறேன். ஏதிர்காலத்தில் கணக்காய்வு சம்பந்தமான தகவல்கள் காலதாமதமில்லாது பெறுவதற்கான முயற்சிகளை செய்கின்றேன்.

2.2.3 சட்டங்கள் விதிகள் மற்றும் சட்டங்கள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

(அ)

I. கணிப்புக்கள் சரியானவை மேலும் ஆட்சேர்ப்பு நடவடிக்கை ஒழுங்காக மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்கிறேன்.

II. (அ) புனர்வாழ்வு அதிகாரசபையில் வெளிக்கள உத்தியோகத்தர்கள் எவரும் இல்லை. அலுவலக ஊழிர்கள் அலுவலக கடமைகளுடன் வெளிக்கள கடமைகளிலும் ஈடுபடுகின்றனர். இந்நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள சுயதொழில் கடன் திட்டமுறை இரண்டிற்குட்படுத்தப்பட்டு மிகப்பெரிய அளவில் வெளிக்கள கடமை செய்யவேண்டியுள்ளது. வெளிக்கள கடமைகளில் ஈடுபடுவதற்காக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மூவரும் தமிழ்மொழி பேசும் முகாமைத்துவ உதவியாளர்கள் இருவரும் மட்டுமே 2012ல் ஆண்டில் இருந்தனர் என்றும், அவர்களை மீண்டும், மீண்டும் வாரஇறுதி நாட்களில் கூட கடமைகளில் ஈடுபடுத்த வேண்டியிருந்தது. 2012ஆம் ஆரம்பிக்கப்பட்ட புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கான கடன் திட்ட முறையை செயற்படுத்துவதற்கு அமைச்சரவை மூலம் இவ்வதிகாரசபைக்கு பொறுப்பளிக்கப்பட்டதுடன் அது சம்பந்தமாக நிதி நிறுவனங்கள், நிதி அமைச்சு மற்றும் இவ்வதிகாரசபை ஒன்றிணைந்து செய்துகொண்ட கடன் ஒப்பந்தற்கிணங்க வெளிக்களகடமைகளின் அளவு நடைமுறைப்படுத்தப்படும் வெளிக்களகடமைகளின் அளவைவிட 100மூ தினால் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டது.இந்த கடமைக் கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டிய கட்டாய கடமை உண்டானது. மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக மேற்படி கொடுப்பனவு செலுத்தும் நிலை ஏற்பட்டது.

(ஆ) தாபனக்கோவை அல்லது சுற்றறிக்கை மீறல்களை மேற்கொண்டு திரட்டிய கொடுப்பனவை அதிகரிப்பதற்கு பணிப்பாளர் சபை எந்தவித தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை 2012.12.10 திகதியுடைய புனர்வாழ்வு அதிகாரசபையின் பணிப்பாளர் சபையால் வெளிகளக் கடமைக்காக விசேட கொடுப்பனவிற்கு அனுமதி அளித்ததே தவிர அது திரட்டிய கொடுப்பனவை அதிகரிப்பதற்கோ அல்லது அக்கொடுப்பனவை நிறுத்துவதற்கோ அனுமதி அளிக்கப்படவில்லை என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதிரியான விசேட கொடுப்பனவு கொடுக்கப்படுவது , அமைச்சரவையால் புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்களுக்காக கடன் திட்டமுறை செயற்படுத்துவதற்கு அதிகாரசபைக்கு ஒப்படைத்ததன் காரணமாக

ஏற்பட்ட வெளிக்கள கடமையின் அளவு 100% ஆல் அதிகரிக்க வேண்டியேற்பட்டது இதற்கிணங்க

- ❖ புனர்வாழ்வளிக்கப்பட்ட பயிலுனர்களின் தொழில் முயற்சி அபிவிருத்தி பயிற்சி வேலைத்திட்டம் வெளிக்களத்திலேயெ நடைபைறுதல்.
- ❖ கடனாளிகளை தெரிவு செய்வதற்கு மாவட்ட மட்டத்தில் நேரடி கலந்துரையாடல்கள் நடாத்தும் நிலை ஏற்படல்.
- ❖ அவர்களின் கடன் பிரச்சினைகள் சம்பந்தமாக தேடிப்பார்பதற்கு களக்கூட்டங்கள் ஏற்பாடு செய்தல்
- ❖ கடனாளிகளின் சுயவேலைதிட்டம் 4000 அவற்றை 2012ம் வருடத்தினுள் பின் விசாரணை நடாத்தல் 2012 இன் செயற்திட்டதிற்கேற்ப நடைமுறைப்படுத்தல்.
- ❖ இலங்கை வங்கி,மக்கள் வங்கி, ஸ்ரீலங்கா சேமிப்பு வங்கி போன்ற நிதி நிறுவனங்களின் கிளைகளை ஒன்றிணைந்து 300 மில்லியன் கடன் தொகை குறிப்பிட்ட காலத்தினுள் மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

இந்நிலைமையில் கடமை நடவடிக்கை காரணமாக அதிகாரிகளை இரவு,பகல்,வாரஇறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களெனப் பார் க்காது வேலைகளில் ஈடுப்படுத்தும் நோக்குடனும் அத்துடன் வெளி க்களகடமைகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் அவர்களின் அலுவல கக் கடமைகளை செய்வதற்கு அதிகாரிகள் இன்மையால் வெளிக்க ள உத்தியோகத்தர் கடமைகளில் ஈடுபட்ட அதிகாரிகளினால் வெளி க்கள கடமைகளை காரணமாகக் கொண்டு காலதாமதமாகிய அலு வலுக கடமைகளில் ஈடுபடுவதற்கும், கடமையை முறையாகவும், திறமையாகவும் முன்னெடுத்துச் செல்வதற்கும் உதவி செய்வதுடன், இந்த விசேட கொடுப்பனவு பின்வரும் காரணங்களுக்காக விசேட கவனத்திற்குட்படுத்தப்பட்டு பெற்றுக்கொடுப்பதற்கு பணிப்பாளர் சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

- ❖ ஒரு மாதத்தில் 05 நாட்களுக்கு மாத்திரமே விசேட கொடுப்பனவு கொடுத்தல்.
- ❖ அரசின் ஒன்றிணைந்த நிதியிலிருந்து கிடைக்கப்பெறும் பிரதியுபகாரங்களை சேர்த்துக்கொள்ளாமை.
- ❖ இது சம்பந்தமாக 2012 செயற்பாட்டுத்திட்டத்தின் கீழ் கடன் பரிசீலனை வேலைத்திட்டத்திற்காக வேறாக்கப்பட்ட கடன்

திட்டமுறை நிதி நிறுனங்களால் புனர்வாழ்வு அதிகார சபைக்கு வழங்கும் 1% சதவீத வட்டி வீதம் சேவைக்கட்டணத்தின் ஒரு பகுதி இக்கொடுப்பனவிற்காக பயன்படுத்தல்.

III. கணிப்புகள் சரியானவை.

4.செயற்பாட்டு மீளாய்வு.

*4.1*முகாமைத்துவ திறமையீனங்கள்

I. நிதி நிறுவனங்களுடன் இவ்வாறான கடன்திட்ட முறைகளை செயற்படுத்தும் போது கடன் வழங்கும் அளவிற்கேற்ப அந்த காலஅளவிற்கேற்ப அந்நிதி நிறுவனத்திற்கு கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறான நிலைமை பிரயோகப்படுவதுடன், எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இந்நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கைகளை செயற்படுத்தும்.

II. குறிப்பிட்ட நட்டயீட்டுத் தொகை எதிர்காலத்தில் அறவிட்டுக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்கிறேன்.

III. புனர்வாழ்வு அதிகாரசபையினால் , தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் உட்பட அதிகாரிகளுடன் கலந்துரையாடி அந்நிதி புனர்வாழ்வு அதிகார சபையினால் தெரிவுசெய்து பெயர் குறிப்பிடப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக்கொடுக்கத்தீர்மானிக்கப்பட்டது. இதற்கேற்ப புனர்வாழ்வு அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் அதிகாரசபைக்கு சேரவேண்டிய மீதிகளுக்காக அக்கடன் திட்டமுறை செயற்படுத்துவதற்கு அனுமதி யளிக்கப்பட்டதுடன் அதற்குரிய வட்டி பணம் நீக்கி விடுவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. எனினும் இதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் இதுவரை தெளிவான அறிக்கை கிடைக்கப் பெறவில்லை.வீடு மற்றும் கட்டமைப்பு பொறியிலாளர் சேவை அமைச்சினால் இவ்விடயத்திற்கு தீர்வு பெற்றுத்தரும்படி தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே போன்று இது சம்பந்தமாக ஆலோசனை கேட்டு திறைசேரிக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. அதன்பிரகாரம் புனர்வாழ்வு அதிகாரசபையும், தேசிய வீடமைப்பு அதிகாரசபையும் இவ்வேலைத் திட்டத்தினை மேம்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்ட போதிலும் வீடமைப்பு அதிகாரசபை தேவையான ஆதரவினை தெரிவிக்காமையினால் இவ்வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு முடியாத நிலை உருவாகியுள்ளது. அதே போன்று எதிர்காலத்தில் இது சம்பந்தமாக நீதிபதி திணைக்களத்தில் மூலம் தேவையான ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கிறேன்.

4.2.ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவு சம்பந்தமாக நிதியத்தினை கட்டியெழுப்புதல்.

மேற்படி பணிக்கொடையை வேறாக்குவதற்கு தேவையான கொடுப்பனவுக்காக திறைசேரி வரவு செலவுத் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுப்பதுடன் 2013.10.11 திகதிய பிடி/ஜேஏஎல்ஈ/174/2/2 இலக்கமுடைய கடிதம் மூலம் இது சம்பந்தமான கொடுப்பனவு பெற்றுக்கொடுப்பது இச்சந்தர்ப்பத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு முடியாது என தெரிவிக்கப்பட்டது. நிறுவனத்தின் நிதி நிலைமைக்கேற்ப எதிர்காலத்தில் பணிக்கொடை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்கிறேன்.(கடிதத்தின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

5.கணக்கீட்டுபொறுப்பும் சிறந்த நிர்வாகமும்

5.1 உள்ளகக் கணக்காய்வு

அதிகாரசபையின் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் பிரதான மேற்பார்வைக் குட்படுத்தப்பட்டு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படும்.

5.2 வரவு செலவு கட்டுப்பாடு

வரவு செலவு படிவங்கள் பயனுள்ள முகாமைத்துவ நிர்வாகிகள் பயன்படுத்துவதற்கு உச்சக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் விசேட சந்தர்ப்பங்கள் மற்றும் நிகழ்ச்சிகளைக் காரணமாகக் கொண்டு அவை தவிர்த்துக்கொள்ளப்படும்.

6.முறைமையும் கட்டுப்பாடும்

நிலையான சொத்துக்களுக்காக, நிலையான சொத்துக்கள் பதிவேடு நடைமுறைப்படுத்துவதற்கும் அதனைப் பராமரிப்பதற்கும் வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஆ,.இ,ஈ முறையாக நடவடிக்கை மேற்கொள்வதற்காக அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஈ.ஏ.சமரசிங்க,

தலைவா,

புனர்வாழ்வு அதிகாரசபை.